# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ அதிவிசேஷமானது**

අංක 1804/51 - 2013 අප්‍රේල් 05 වැනි සිකුරාදා - 2013.04.05

***1804/51 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில், மினுவன்கொட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 126/2, புருல்லபிடிய கிராம சேவகர் பிரிவில், புருல்ல பிடிய கிராமத்தில், தாசிய பத்துவ சிறு பிரிவில் அமைந்துள்ள கம்பஹா சிரேஷ்ட நில அளவையாளரின் 2013.02.20 ஆந் திகதியிடப் பட்ட இல. கம்/3895 எனக் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இல. 01 மற்றும் 02 இன் விபரங்கள் பின்வருமாறு :

**துண்டு இல. 01**
காணியின் பெயர் : மூனமல்கஹகும்புர ; விபரம் : திறந்த வெளி ; உரிமை கோருபவர் : ஆர். டபிள்யூ. எச். ராஜபக்ச, ஆண்டியாகார, நில்பனாகொட ; விஸ்தீரணம் : 0.0384 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**
காணியின் பெயர் : மூனமல்கஹகும்புர ; விபரம் : வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடமொன்றும் தற்காலிகக் கட்டிடமொன்றும் காணப்படுகின்றன ; உரிமை கோருபவர் : ஆர். டபிள்யூ. எச். ராஜபக்ச, ஆண்டியாகார, நில்பனாகொட ; விஸ்தீரணம் : 0.0121 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மினுவங்கொட பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சீ. பி. டபிள்யூ. குணதிலக,
பதில் பிரதேச செயலாளர்,
மினுவங்கொட.

பிரதேச செயலகம்,
மினுவங்கொட,
2013.03.06.

04 - 647

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : பிய 3/1/1/231.

2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1463/24 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி ஆ. வ. இல. கம். 3361 அறிவித்தலில் துண்டு இல. 02 ஆனது துண்டு இல. 40 மற்றும் 41 எனத் திருத்தம் செய்யப்படுகின்றது.

**துண்டு இல. 40**
காணியின் பெயர் : கொஸ்கஹவத்தை, வரி மதிப்பீட்டு இல. 169, மாவர மந்திய வீதி ; விபரம் : தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி ஒன்று காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : டபிள்யூ. டீ. எப். எம். நியான்சி, இல. 169, மாவரமந்திய வீதி, மாகொல ; விஸ்தீரணம் : 0.0170 ஹெக்டயார்.

**துண்டு இல. 41**
காணியின் பெயர் : கொஸ்கஹவத்தை அல்லது மில்லகஹவத்தை ; விபரம் : தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : கே. ஏ. பீ. தயாரத்ன, அரலிய வத்தை, மாகொல தெற்கு ; விஸ்தீரணம் : 0.0034 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பியகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சம்பிகா டீ. தர்மசேன,
உதவிப் பிரதேச செயலாளர்,
பியகம.

பிரதேச செயலகம்,
பியகம,
2013.03.22.

04 - 646/1

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : பிய/3/1/1/231.

2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதிய 1431/27 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் ஆ. வ. இல. கம். 3429 இல் துண்டு இல. 45 ஆனது துண்டு இல. 96 மற்றும் 97 எனத் திருத்தம் செய்யப்படுகின்றது.

**துண்டு இல. 96**
காணியின் பெயர் : மில்லகஹவத்தை ; விபரம் : தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : பீ. ஆர். ஏ. எஸ். குணதிலக, இல. 486, மாகொல வடக்கு, மாகொல ; விஸ்தீரணம் : 0.0037 ஹெக்டயார்.

**துண்டு இல. 97**
காணியின் பெயர் : மில்லகஹவத்தை ; விபரம் : தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : பீ. ஏ. பீ. குணதிலக, இல. 486, மாகொல வடக்கு, மாகொல ; விஸ்தீரணம் : 0.0101 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பியகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சம்பிகா டீ. தர்மசேன,
பதில் பிரதேச செயலாளர்,
பியகம.

பிரதேச செயலகம்,
பியகம,
2013.03.27.

04 - 646/2

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : டீஎஸ்/யூபி/3/1/எல்ஏகியு/எகோ.டாங்க்/37.
காணி அமைச்சின் குறிப்பு இல. : எல்டீ/05/2009/டப்எஸ்/292.

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் 2013.01.04 ஆந் திகதிய 1791/39 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் இல. 01 - 543 இன் கீழ் என்னால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தினங்களை நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக வேறு தினங்களை விதந்துரைப்பதன் மூலம் அவ்விளம்பரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றப்பட்டுள்ள தென்பதை இத்தால் தெரியப்படுத்துகிறேன்.

| நீக்க வேண்டிய தினங்கள் | நீக்கப்பட்ட தினங்களுக்குப் பதிலாக விதந்துரைக்கப்படும் தினங்கள் |
|---|---|
| 2013 பெப்ரவரி மாதம் 13 | 2013 யூன் மாதம் 24 |
| 2013 பெப்ரவரி மாதம் 06 | 2013 யூன் மாதம் 17 |

பீ. எம். நிமல் பாலசூரிய,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
2013.04.03.

04 - 648

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.